15th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓவரால் முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். நான் நேற்று பேசும்பொழுது மாவட்டத்திற்கான ஓவரால் ஆவரேஜ் 35-க்கு மேற்பட்டிருந்தாலும் திருப்தி அடையலாமென்று கூறினேன். அதற்குட்பட்டு கல்வித் துறை அதிகாரிகள் வேண்டியதைச் செய்வார்கள்.

திரு. எஸ். மாதவன் : ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் காரணம் காட்டி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், குறிப்பாக சிறு கிராமங்களில் பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த மாதிரி தவறுகள் நடைபெற்றால் கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

Deposits (refund)

* 246 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that inordinate delay is being caused in the matter of refund of deposits; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government are not aware of any inordinate delays in sanctioning refunds of contributions deposited towards building works under the Local Development Works Programme. If specific instances of inordinate delays are brought to the notice of Government, they will be looked into and the situation remedied.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி மாவட்டத்தில் காரிய மங்கலம் பெண்ணாகரம் போன்ற இடங்களில்

Mr. SPEAKER : If any specific case is brought to the notice of the Government, it will be looked into.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரீபண்டுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் சரியாக அந்த மனு பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தாமதம் ஏற்படும். மேலும், ரீபண்டு காலாவதியாகி விட்டால், அதற்கு ஒரு ப்ரொஸீஜர் இருக்கிறது. அதன்படி அரசாங்கத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

Evening colleges

* 247 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open evening colleges; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.